## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

---

# 1982 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, வாடகைக் குடியிருப்பாளர் பாதுகாப்புச் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்

---

*[1982, மார்ச்சு மாதம் 25 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

1982, மார்ச்சு மாதம் 26 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 65 தபாற் செலவு : சதம் 50

## 1982 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, வாடகைக் குடியிருப்பாளர் பாதுகாப்புச் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்

[1982, மார்ச்சு மாதம் 25 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 32/81
1471

**1970 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, வாடகைக் குடியிருப்பாளர் பாதுகாப்புச் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1\. இச்சட்டமானது, 1982 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, வாடகைக் குடியிருப்பாளர் பாதுகாப்புச் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்.*

2\. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும், 1970 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, வாடகைக் குடியிருப்பாளர் பாதுகாப்புச் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்குவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது. *1970 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

3\. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவை உடனடுத்து, பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், இது 7அ என்னும் பிரிவு என்றவாறு பயனுடையதாக இருத்தலும் வேண்டும் :— *முதன்மைச் சட்டவாக்கத்தில் 7அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

*"எவையேனும் வளவு முதலானவற்றிற்கு காணிச் சொந்தக்காரர் ஒருவரினால் தடுத்து வைக்கப்பட்ட வாழ் வசதிகளை மீளப் புதுப்பித்தலும் செய்விக்கப்பட்ட சேதங்களைப் பழுதுபார்த்தலும்.*

7அ. (1) ஆணையாளரோ அல்லது 7 ஆம் பிரிவின் கீழான விசாரணையொன்றை நடாத்துவதற்கு அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் பகிரங்க அலுவலரோ, அப்பிரிவின்கீழான விசாரணையொன்றை நடாத்தியதன்மேல், ஏதேனும் வளவின் காணிச் சொந்தக்காரர் அல்லது வேறு எவரேனும் பகிரங்க அலுவலர்—

(அ) அத்தகைய வளவின் ஏதேனும் பாகத்தைச் சேதப்படுத்தியுள்ளாரென, அகற்றியுள்ளாரென அல்லது அதனுடன் கையாடிக் கெடுத்துள்ளாரென ;

(ஆ) அத்தகைய வளவின் வாடகைக் குடியிருப்பாளருக்கென அல்லது அதில் இருப்பாட்சி கொண்டிருக்கும் ஆளுக்கென முன்னரே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஏதேனும் வாழ் வசதியை அல்லது வசதியை துண்டித்துள்ளாரென அல்லது தடுத்து வைத்துள்ளாரென ;

எ 61108—6,625 (01/82)

(இ) அத்தகைய வளவின் வாடகைக் குடியிருப்பாள ருக்கென அல்லது அதில் இருப்பாட்சி கொண் டிருக்கும் ஆளுக்கென ஏற்பாடுசெய்யப்பட்ட ஏதேனும் அத்தியாவசியமான வழங்கலை அல் லது சேவையை இல்லாமற் செய்துள்ளாரென, தடுத்து வைத்துள்ளாரென அல்லது பொருத் தமான நிலைமையில் பேணிவருவதற்குத் தவறி யுள்ளாரென;

(ஈ) அத்தகைய வளவின் வாடகைக் குடியிருப் பாளரை அல்லது அதில் இருப்பாட்சி கொண் டிருக்கும் ஆளை, அத்தகைய வளவுக்கு அணுக விடாது தடைசெய்துள்ளாரென,

திருப்தியடையுமிடத்து, அவர், எழுத்திலான அறிவித் தல் மூலம், அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய தேதிக்கு முன்னர், அல் லது அதற்கென, காணிச் சொந்தக்காரரினால் செய்யப் படும் விண்ணப்பமொன்றின்மீது ஆணையாளரினால் அனுமதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நீடிக்கப் பட்ட காலத்துக்குள்—

(i) அத்தகைய சேதத்தைப் பழுதுபார்க்கும்படி; அல்லது

(ii) அத்தகைய வசதியை அல்லது வாழ் வசதியை மீளப்புதுப்பிக்கும்படி அல்லது பழுதுபார்க் கும்படி; அல்லது

(iii) அத்தகைய அத்தியாவசியமான வழங்கலை அல் லது சேவையை புதுப்பிக்கும்படி, பழுதுபார்க் கும்படி அல்லது பொருத்தமான நிலைமையில் பேணிவரும்படி; அல்லது

(iv) அத்தகைய வாடகைக் குடியிருப்பாளர் அல் லது இருப்பாட்சி கொண்டிருக்கும் ஆள் அத் தகைய வளவினை அணுகுவதை அனுமதிக் கும்படி,

அத்தகைய வளவின் காணிச் சொந்தக்காரரைத் தேவைப்படுத்தலாம்.

(2) ஏதேனும் வளவின் காணிச் சொந்தக்காரர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலொன்றி னால் தம்மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டு டன், அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய காலத்துக்குள் அல்லது அப்பிரிவின்கீழ் அவருக்கு அனுமதியளிக்கப்பட்டிருக்கக்கூடியவாறான அத்தகைய நீடிக்கப்பட்ட காலத்துக்குள் இணங்கி யொழுகத் தவறுமிடத்து, ஆணையாளரோ அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரோ—

(அ) அத்தகைய அறிவித்தலில் குறிப்பீடுசெய்யப்பட்ட சேதத்தைப் பழுதுபார்க்கும்படி அல்லது அத்தகைய அறிவித்தலில் குறிப்பீடு செய்யப்பட்ட வசதியை, வாழ்வசதியை அல்லது அத்தியாவசியமான வழங்கலை அல்லது சேவையை மீளப் புதுப்பிக்கும்படி, பழுது பார்க்கும்படி அல்லது பொருத்தமான நிலைமையில் பேணிவரும்படி பணிக்கலாம்;

(ஆ) அத்தகைய பழுதுபார்த்தலைச் செய்வதற்கோ அல்லது அத்தகைய வசதியை, வாழ் வசதியை, அத்தியாவசியமான சேவையை அல்லது வழங்கலை மீளப் புதுப்பிப்பதற்கோ, பழுதுபார்ப்பதற்கோ அல்லது பொருத்தமான நிலைமையில் பேணிவருவதற்கோ இயலாதவராக வாடகைக் குடியிருப்பாளர் இருக்கும் ஏதேனும் விடயத்தில், அத்தகைய சேதத்தைப் பழுதுபார்க்கும்படி அல்லது அத்தகைய வசதியை, வாழ்வசதியை அல்லது அத்தியாவசியமான வழங்கலை அல்லது சேவையை மீளப் புதுப்பிக்கும்படி, பழுதுபார்க்கும்படி அல்லது பொருத்தமான நிலைமையில் பேணிவரும்படி பொது வாழ்வசதிகள் சபையைப் பணிக்கலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின் (அ) எனும் பந்தியின் கீழ் ஆணையாளரினால் ஆக்கப்பட்ட கட்டளையொன்றின் மூலம் அத்தகைய வளவில் எவையேனும் பழுதுபார்த்தல்களை அல்லது மீளப்புதுப்பித்தல்களை நிறைவேற்றுவதற்கு அந்த வளவின் வாடகைக் குடியிருப்பாளர் அல்லது அதில் இருப்பாட்சிகொண்டிருக்கும் ஆள் பணிக்கப்படுகின்றவிடத்து அத்தகைய பழுது பார்த்தலை அல்லது மீளப்புதுப்பித்தலை நிறைவேற்றும் நோக்கத்துக்காக எந்த ஆளின் அல்லது எந்த ஆட்கள் குழுவின் சம்மதம் தேவைப்படுகின்றதோ அந்த ஆள் அல்லது அந்த ஆட்கள் குழு எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் எவை எப்படியிருப்பினும், அத்தகைய வாடகைக் குடியிருப்பாளரே அத்தகைய வளவின் காணிச் சொந்தக்காரர் என்றாற்போன்று, அத்தகைய பழுதுபார்த்தலை அல்லது மீளப் புதுப்பித்தலை நிறைவேற்றுவதற்கு அத்தகைய வாடகைக் குடியிருப்பாளருக்கு, விடயத்திற்கேற்றாற்போல், அனுமதியளித்தல் வேண்டும் அல்லது உரிமம் வழங்குதல் வேண்டும்.

(4) ஏதேனும் வளவின் ஏதேனும் சேதத்தைப் பழுது பார்க்கும்படி அல்லது அத்தகைய வளவின் வாடகைக் குடியிருப்பாளருக்கென அல்லது அதில் இருப்பாட்சி கொண்டிருக்கும் ஆளுக்கென

முன்னர் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த ஏதேனும் வசதியை, வாழ்வசதியை அல்லது அத்தியாவசியமான வழங்கலை அல்லது சேவையை மீளப்புதுப்பிக்கும்படி, பழுதுபார்க்கும்படி அல்லது பொருத்தமான நிலைமையில் பேணிவரும்படி ஏதேனும் வளவின் வாடகைக் குடியிருப்பாளரை அல்லது பொது வாழ்வசதிகள் சபையை (2) ஆம் உட்பிரிவின்கீழ் ஆணையாளர் பணிக்குமிடத்து, ஏதேனும் சட்டத்தில் அல்லது ஒப்பந்தத்தில் உள்ள எது எப்படியிருப்பினும், அல்லது அத்தகைய வளவின் காணிச் சொந்தக்காரர் அத்தகைய பழுதுபார்த்தலை அல்லது அத்தகைய வசதிகளை வாழ்வசதியின் அல்லது அத்தியாவசியமான வழங்கலின் அல்லது சேவையின் மீளப்புதுப்பித்தலை அல்லது பழுதுபார்த்தலைச் செய்வதற்குச் சம்மதிக்கவில்லை என்னும் நிகழ்வு எப்படியிருப்பினும், அத்தகைய வாடகைக் குடியிருப்பாளரோ அல்லது அத்தகைய சபையோ அத்தகைய பழுதுபார்த்தலைச் செய்யலாம் அல்லது அத்தகை வசதியை, வாழ்வசதியை அல்லது அத்தியாவசியமான வழங்கலை அல்லது சேவையை மீளப் புதுப்பிக்கலாம் அல்லது பழுதுபார்க்கலாம் அல்லது பொருத்தமான நிலைமையில் பேணிவரலாம். அத்தகைய பழுதுபார்த்தலைச் செய்வதற்கென அல்லது அத்தகைய வசதியை, வாழ்வசதியை அல்லது அத்தியாவசியமான வழங்கலை அல்லது சேவையை மீளப்புதுப்பித்தலுக்கென, பழுதுபார்த்தலுக்கென அல்லது பொருத்தமான நிலைமையில் பேணிவருதலுக்கென அத்தகைய வாடகைக் குடியிருப்பாளரை இயலச்செய்தலுக்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய உதவியை அவருக்கு அளிக்கும்படி ஆணையாளரோ அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரோ பொலிசாரைத் தேவைப்படுத்தலாம் என்பதுடன், அத்தகைய ஏதேனும் தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகுதல் பொலிசாரின் கடமையாதலும் வேண்டும்.

(5) இரண்டாம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றுக்கிணங்க, ஏதேனும் வளவின் வாடகைக் குடியிருப்பாளர், ஏதேனும் வளவில் ஏதேனும் பழுதுபார்த்தலைச் செய்யுமிடத்து, அல்லது அவருக்காக அல்லது அத்தகைய வளவின் இருப்பாட்சி செய்யும் ஆளுக்காக முன்னரே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஏதேனும் வசதியை, வாழ்வசதியை அல்லது அத்தியாவசியமான

வழங்கலை அல்லது சேவையை மீளப்புதுப்பிக்குமிடத்து அல்லது பழுதுபார்க்குமிடத்து அல்லது பொருத்தமான நிலைமையில் பேணிவருமிடத்து, ஆணையாளரோ அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரோ, அத்தகைய வளவின் வாடகைக் குடியிருப்பாளரையும் காணிச் சொந்தக்காரரையும் விளங்கிய பின்னர், அத்தகைய பழுதுபார்த்தலைச் செய்ததில் அல்லது அத்தகைய வசதியை, வாழ்வசதியை, அல்லது அத்தியாவசியமான வழங்கலை அல்லது சேவையை மீளப்புதுப்பித்ததில், பழுதுபார்த்ததில் அல்லது பொருத்தமான நிலைமையில் பேணிவருவதில் வாடகைக் குடியிருப்பாளரினால் நியாயமாக உறப்பட்டதான தொகையினை, தமது கைப்பட வழங்கப்பட்ட சான்றிதழொன்றின் மூலம் தீர்மானித்தல் வேண்டும். அவ்வாறு சான்றுபடுத்தப்பட்ட தொகையானது, சம்பந்தப்பட்ட அத்தொகையைக் கவனத்திற்கொண்டு, ஆணையாளரினால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையிலான தவணைப்பணங்களாக, அத்தகைய வளவுக்கென வாடகைக் குடியிருப்பாளரினால் செலுத்தப்படற்பாலதான மாதாந்தக் கூலியிலிருந்து ஏதேனும் சட்டத்தில், முரணாக எது எப்படியிருப்பினும், அவரால் கழிக்கப்படலாம்.

(6) இரண்டாம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றுக்கிணங்க, பொது வாழ்வசதிகள் சபை ஏதேனும் வளவில் ஏதேனும் பழுது பார்த்தலைச் செய்யுமிடத்து, அல்லது ஏதேனும் வளவில் வாடகைக் குடியிருப்பாளருக்காக அல்லது அதில் இருப்பாட்சி கொண்டிருக்கும் ஆளுக்காக முன்னர் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஏதேனும் வசதியை, வாழ்வசதியை அல்லது அத்தியாவசியமான வழங்கலை அல்லது சேவையை மீளப்புதுப்பிக்குமிடத்து, பழுதுபார்க்குமிடத்து அல்லது பொருத்தமான நிலைமையில் பேணிவருமிடத்து, சபையானது, அத்தகைய பழுதுபார்த்தலைச் செய்ததில் அல்லது அத்தகைய வசதியை, வாழ்வசதியை அல்லது அத்தியாவசியமான வழங்கலை அல்லது சேவையை மீளப்புதுப்பித்ததில், பழுதுபார்த்ததில் அல்லது பொருத்தமான நிலைமையில் பேணிவருவதில் உறப்பட்ட செலவுத்தொகைகளை ஏதேனும் சட்டத்தில், முரணாக எது எப்படியிருப்பினும், அத்தகைய வளவில் காணிச் சொந்தக்காரரிடமிருந்து அறவிடலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) "ஆணையாளர்" என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்து பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும் :—

'"பொது வாழ்வசதிகள் சபை" என்பது, 1973 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, பொது வாழ்வசதிகள் சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட பொது வாழ்வசதிகள் சபை எனப் பொருள்படும் ;' ; அத்துடன்

(ஆ) "வெளியேற்றல்" என்னும் வரைவிலக்கணத்தை உடனடுத்து பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும் :—

'"அத்தியாவசியமான வழங்கல் அல்லது சேவை" என்பது, நீர், மின்சார வழங்கலையும், அத்துடன் வாசல்களில் படிக்கட்டுகள், மின்தூக்கிகளில் உள்ள வெளிச்சம் உள்ளிட்ட ஒளி வழங்கலையும், மலகூடவேலையையும் அல்லது சுகாதார சேவையையும் உள்ளடக்கும் ;'.